

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

செலவினத் தலைப்பு இல :- 437

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் இராஜாங்க அமைச்சு

முன்னுரை

2021ஆம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி முதல் டிசம்பர் 31ம் திகதி வரையிலான காலப்பகுதியில் முன்னாள் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அடைந்த செயற்திறனை மேலோட்டமாக பார்க்க இந்த அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

சுற்றுலாத் துறை விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சரவை அமைச்சான சுற்றுலா அமைச்சின் கீழ் செயற்படும் வகையில் 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2197/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் முன்னாள் விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு பல விடய பரப்புகளும் தொழிற்பாடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

அதன்பிறகு, 27 மே 2022ம் திகதிய 2281/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு எனும் புதிய அமைச்சரவை அமைச்சு ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, இலங்கை வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட எயார் லைன்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் ஆகியன இவ் அமைச்சின் விமான சேவைகள் துறையின் நோக்கெல்லையின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன.

இச் செயற்திறன் அறிக்கை 2021ஆம் ஆண்டிற்கான முன்னாள் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்குரிய போதிலும் விமான சேவைகள் துறை இந்த அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ள காரணத்தினால் இவ் அறிக்கையை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது எனது பொறுப்பாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

கே.டி.எஸ். ருவன்சந்ர

செயலாளர்

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

உள்ளடக்கம் **பக்கம் இல.**

அத்தியாயம்	01	-	நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	01
அத்தியாயம்	02	-	முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	05
அத்தியாயம்	03	-	வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை	26
அத்தியாயம்	04	-	செயலாற்றுகை சுட்டிகள்	43
அத்தியாயம்	05	-	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	45
அத்தியாயம்	06	-	மனித வள விபரம்	47
அத்தியாயம்	07	-	இணக்க அறிக்கை	49

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

சுற்றுலாத் துறை விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சரவை அமைச்சான சுற்றுலா அமைச்சின் கீழ் செயற்படும் வகையில் 2020 ஓகஸ்ட் 09 ஆம் திகதிய 2187/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட விமானச் சேவைகள் மறறும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகள் அதிவிசேட வர்த்தமானி இல. 2196/27 இன் பிரகாரம் ஒக்டோபர் 06, 2020 இல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தப்பட்டடது. இதற்கிணங்க, சிறந்த விமானப் போக்குவரத்து சேவையை வழங்குவதன் ஊடாக சுற்றுலாத் துறையானது பலப்படுத்தப்படுதல் வேண்டும். சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபை, இலங்கை வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் போன்றன அமைச்சின் நோக்கெல்லையாக குறிப்பிடப்பட்டுள்ளன. இராஜாங்க அமைச்சின் மற்றுமொரு விடயப்பரப்பாக ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குதலும் உள்ளடங்கும்.

1.2 அமைச்சின் தொலைநோக்கு, பணிநோக்கு

1.2.1. தொலைநோக்கு

பிராந்தியத்தில் ஒரு முன்னணி விமானப் போக்குவரத்து மையமாக இலங்கையை முன்னிறுத்தி இலங்கையின் ஏற்றுமதி வலயங்களை மிகவும் கவர்ச்சி மிக்க முதலீடுகளுக்கான தளமாக நிகழச் செய்தல்.

1.2.2. பணிநோக்கு

சம்பந்தப்பட்ட பொருளாதாரத் துறைகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், விமானப் போக்குவரத்துச் சேவைகளை வினைத்திறனும் பாதுகாப்பும் மற்றும் பயணர் நேயம் கொண்டதுமான சேவையாக மாற்றி அமைத்தல் அத்துடன், வெளிநாடு முதலீடுகளைக் கவரும் நோக்கில் ஒரு சமநிலைமிக்க சுற்றாடல் நேயம் கொண்ட, மற்றும் சிறந்த விருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு முறைமையுடன் கூடிய ஏற்றுமதி வலயங்களைத் ஸ்தாபிப்பதற்கு ஆதரவளித்தல்.

1.3 இராஜாங்க அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள்


பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள், கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கிணங்க சுற்றுலா அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் “ நட்புணர்வான சூழல் மற்றும் உள்நாட்டு கலாசாரம், மற்றும் உயர் அந்நிய செலாவணியை ஈட்டும் சுற்றுலாத்துறைக்கான” விமான போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை வகுப்பதில் உதவுதல், தேசிய வரவு செலவு திட்டம், பிராந்திய முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் என்பவற்றின் கீழ் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல், மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் விடயவிதானங்கள் மற்றும் தொழிற்பாடுகளை அமுல்படுத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவை இவ் இராஜாங்க அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள் ஆகும்.

1.4. இராஜாங்க அமைச்சின் விசேட முன்னுரிமை செயற்பாடுகள்

1. தற்போதுள்ள சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் கைத்தொழில் நகரங்களை உகந்த மட்டத்திலான செயற்றிறனில் பயன்படுத்துவதற்கு தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக மேம்படுத்தலும் நவீனமயப்படுத்தலும்.
2. கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுபாதை மற்றும் பயணிகள் முனையத்தின் அபிவிருத்தி.
3. கட்டுநாயக்க விமான நிலையத்தின் உள்நாட்டு பயணிகள் முனையத்தின் அபிவிருத்தி.
4. நுவரெலியா விமான நிலையம் உட்பட அனைத்து உள்நாட்டு விமான நிலையங்களையும் அபிவிருத்தி செய்தல்.
5. மத்தள விமான நிலையத்தின் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
6. இலங்கை விமான சேவைகளை சர்வதேச தர நியமத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
7. விமானம் மூலமான சரக்கு போக்குவரத்து வசதிகளை விரிவுப்படுத்தல்.

1.3. நிறுவன கட்டமைப்பு

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு



இநிசே- இலங்கை நிர்வாக சேவை, **இதிசே**- இலங்கை திட்டமிடல் சேவை, **சிஉசே**- சிரேஷ்ட உதவி செயலாளர், **உ.செ**.-உதவி செயலாளர், **அஉ**- அபிவிருத்தி உத்தியோகத்தர், **முசேஉ**- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், **தகதொஉ**- தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர், **வீஒ**- வீடியோ ஒளிப்பதிவாளர், **புஒ**-புகைப்பட ஒளிபதிவாளர், **உபுஒ**- உதவி புகைப்பட ஒளிப்பதிவாளர், **அஉசே**- அலுவலக உதவி சேவையாளர்

1.4. இராஜாங்க அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களும் சட்ட வேலைச்சட்டகமும்

அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்	அமுல்படுத்தப்படுகின்ற சட்டங்கள்
1. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை 2. இலங்கை வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனம். 3. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்.	1. 2002இன் 34ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை 2. 2020இன் 14ஆம் இலக்க சிவில் விமானச் சேவைகள் சட்டம் 3. 1982இன் 2ஆம் இலக்க விமானச் செலுத்துகை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 4. 2018இன் 29ஆம் இலக்க வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சட்டம் 5. 1950இன் 15ஆம் இலக்க விமானச் செலுத்துகைச் சட்டம்

1.6 வெளிநாட்டு நிதியுதவி செயற்றிட்டம்

தொ.இ.	செயற்றிட்டத்தின் பெயர்	நன்கொடை நிறுவனம்	மதிப்பீட்டு செலவு (ரூ.மி)	காலம் (மாதம்)
1	பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II நிலை 2 தொகுதி ஏ	ஜப்பான் சரவதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)	105,570	36
2	பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II நிலை 2 தொகுதி பி	ஜப்பான் சரவதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)	6,118	30
3	விரிவான வடிவமைப்பு மற்றும் பிந்திய வடிவமைப்பு ஆலோசனை சேவைகள் கட்டம் II தொகுதி சீ	ஜப்பான் சரவதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)	3,982	130

அத்தியாயம் 2 – முன்னேற்றம், விசேட அடைவுகள் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 இருபக்க மற்றும் பல்பக்க உடன்படிக்கைகள்

- பெயர் குறிப்படப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பிரதிநிதி ஒருவர் மூலம் பின்வரும் தொடக்க விமானச் சேவைகள் உடன்படிக்கைகளில் (Air Services Agreement - ASA) ஒப்பமிடுவதற்காக புதியதாக அமைச்சரவை அங்கீகாரங்கள் பெறப்பட்டன.

    - இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான விமானச் சேவை உடன்படிக்கை.
    - இலங்கைக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான விமானச் சேவை உடன்படிக்கை.

- **விமானச் சேவைகள் குறித்தான ஒதுக்கம்**

    - இலங்கைக்கும் மாலைத்தீவுக்கும் இடையில் விமானம் மூலமான பயணிகள் மற்றும் பொதிகள் போக்குவதத்திற்காக "பிட்ஸ் ஏவியேஷன்" (FITS Aviation) அமர்த்தப்பட்டது.
    - ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான விமானச் சேவை உடன்படிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் "எயார் அராபியா" (Air Arabia) மற்றும் "விஸ் எயார் அபுதாபி" (Wizz Abudabi) ஆகியவற்றை அமர்த்துவதற்கு சம்மதம் பெறப்பட்டது.
    - 2020/21 குளிர்காலத்திற்காக வாரமொன்றுக்கு 2 விமானங்கள் செயற்படும் வகையில் தற்காலிக அனுமதி (6 மாத காலத்திற்கு) "அஸுர் எயார்லைன்ஸ்" இற்கு வழங்கப்பட்டது.
    - பங்களாதேசத்திற்கும் இலங்கைக்கும் இடையே விமான சேவைகள் உடன்படிக்கை விதிகளின் அடிப்படையில் " வரையறுக்கப்பட்ட யுஎஸ் பங்களா எயார்லைன்ஸ்" ஐ (US Bangla Airlines Limited) நியமிக்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

- **புதிய விமான பாதைகள் அறிமுகம்**

    - இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் விமானப் பயணக் குமிழியை உருவாக்குவதன் மூலம விமானப் பாதைகளை மீண்டும் நிறுவுதல்.
    - கொழும்பு – காட்மண்டு – கொழும்பு பயணத்திற்காக ஒரு வாரத்தில் இருமுறை விமானச் சேவையினை முன்னெடுக்கும் வகையில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
    - கொழும்பு – கராச்சி – லாஹுர் - கராச்சி – கொழும்பு இடையில் துணை நிறுத்த உரிமைகள் - இந்த விடயமானது பகிஸ்தானிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தினால் பின்பற்றப்பட்டு வருகின்றது.
    - சீனா, ஷங்காய் நகருக்கு ஸ்ரீலங்கள் எயார் லைன்ஸ் சேவையைத் தொடர்தல் - இவ் விடயம் சீனாவிலுள்ள இலங்கை தூதரகத்தினால் கையாளப்பட்டது.
    - ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மூலமாக உத்தேச கொழும்பு – டெல் அவிவ் (இஸ்ரேல்) பயணத்திற்காக சவூதியின் ஆகாய எல்லையில் பயணிப்பதற்கான சவூதி விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்தான அங்கீகாரம் கோரப்பட்டது.

- **வரி**

  - இலங்கைக்கும் மாலைத்தீவிற்கும் இடையிலான இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு உடன்படிக்கையினை நிறைவு செய்தல் - அரசிறைக் கொள்கைத் திணைகளத்துடன் தொடரப்படுகிறது.

- **ஐந்தாவது சுயாதின உரிமைகள்**

டேர்கிஷ் எயார்லைன்ஸ்

- டேர்கிஷ் எயார் லைன்ஸ் விமானச் சேவையானது மாலி – கொழும்புக்கான தமது விமானங்களுக்கான ஐந்தாவது சுயாதீன உரிமைகளை உபயோகிப்பதற்கான அங்கீகாரத்தினை வழங்கியது (6 மாதத்திற்கு).

ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ்

- கொழும்பு – சீனா – மாலைதீவு – கொழும்பு
- கொழும்பு – மாலி – ஜென் தீவு – கொழும்பு
- கொழும்பு – மாலி – சிங்கப்பூர் - மாலி – கொழும்பு

வெளிவிவகார அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக

- மாலைதீவு மற்றும் ரஷ்யா

- **நடைமுறையிலுள்ள விமானச் சேவை உடன்படிக்கைகள் பற்றிய திருத்தங்கள்**

கனடா மற்றும் இலங்கை – குறித்த விமானச் சேவை உடன்படிக்கையில் சில திருத்தங்களைக் கூட்டிணைப்பதற்கு வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

- **நேரடி இயக்கங்கள்**

  - ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மாஸ்கோவிற்கான நேரடியான பயணத்தினை 2021 ஜூலை 30ம் திகதி முதல் மீள ஆரம்பித்தது.
  - ஹொங்காங், மிலான், பிராங்பேர்ட், பரிஸ், காட்மண்டு ஆகிய இடங்களுக்கும் மற்றும் விசேடமாக நைரோபி, சிட்னி, சியோல் போன்ற இடங்களுக்கும் புதிய பயணிகள் மற்றும் சரக்கு விமானப் போக்குவரத்தினை விரிவாக்கம் செய்தல்.
  - ஒரு புதிய மூலோபாயமாக, கொவிட் - 19 காலப்பகுதியில் புதிய சரக்கு விமானங்கனின் இயக்கங்களை அதிகரித்தல்.

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவுடனான கோவிட் 19 முன்னிலை மட்ட ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்கின்றது



தெற்கு மாலைதீவு அபிவிருத்திக்காக மந்தா எயாருடன் ஸ்ரீலங்கன்ஸ் எயார்லைன்ஸ் பங்குதாரர்கள்



2021ம் ஆண்டு காலப்பகுதியில் புதிய பிரதேசங்களுக்கான விரிவாக்கம்




பாரிஸ்



மிலானொ



சிட்னி



நைரொபி

2.2. சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான நிலையங்களின் அபிவிருத்தி

- பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II நிலை 2 தொகுதி பி குறித்தான அனைத்து அபிவிருத்திப் பணிகளும் சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் 100% முடிவுறுத்தப்பட்டுள்ளது.
  (பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விமானத் தரிப்பிடம் மற்றும் விமான குறுக்குப் பாதைகளின் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன.)
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில புதிய குடிவரவுக் கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன.
- பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் புதிய பயண வழிகாட்டல் முறைமை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- உள்நாட்டு விமானநிலைய மற்றும் விமானப் பராமரிப்பு அபிவிருத்திக்கு வசதியளித்தல்.
- மத்தள சர்வதேச விமான நிலையத்தில் ஒரு கூரையின் கீழான கடைகளை(வரி விலக்களிக்கப்பட்ட) அபிவிருத்தி செய்தல்.
- மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தொழில்நுட்ப சோதனை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- இரத்மலானை விமானநிலையத்தினை ஒரு சர்வதேச விமான நிலையமாக மீளத் தாபிக்கும் நோக்கில் அதற்கான அபிவிருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (உ.ம்.: மாலைத்தீவுக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது)
- வெளிநாட்டு மாணவர்களுக்கான ஒரு சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானச் சேவைப் பல்கலைக்கழகமாக விமானச் சேவைப் பயிற்சிக் கல்லூரியை தரமுயர்த்துவதற்கான திட்டம்.



உத்தேசிக்கப்பட்ட கட்டிட வடிவமைப்பு

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II நிலை 2 தொகுதி ஏ





- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில பொதுமக்களுக்காக புதிய குடிவரவுக் கருமபீடங்கள் திறக்கப்படும் நிகழ்வு.



இரத்மலானை விமானநிலையத்தினை ஒரு சர்வதேச விமான நிலையமாக மீளத் தாபிக்கும் நோக்கில் அதற்கான அபிவிருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





வைபவ ரீதியாக சிவில் விமான சேவைகள் பயிற்சி நிலையத்தினை கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்கள் திறக்கும் நிகழ்வு

2.3 வீசாவிற்கான சிபாரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கல்

- **விமானிகளுக்கான பாதுகாப்புச் சான்றிதழ்**

சர்வதேச விமானச் சேவை நிறுவனங்கள் அவற்றின் விமானிகளுக்கு சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் சிபாரிசுடன் பாதுகாப்பு அமைச்சின் சான்றினைப் பெற்று நுழைவு விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும்.

CAASL மூலம் பெறப்பட்டவை	பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டவை	பாதுகாப்பு அமைச்சு மூலம் பெறப்பட்டவை
167	167	72

- **இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வீசாவிற்கான பரிந்துரை கடிதங்கள்**

விமானச் சேவைக் கல்லூரிகள் தொடர்பில் கோரப்பட்ட வீசாக் கடிதங்களுக்கான வீசாவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவ் இராஜாங்க அமைச்சானது குடிவரவு மற்றும்

நுழைவு வீசா	103
வதிவிட வீசா	48

குடியகல்வுத் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குகின்றது.

- **வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் நிறுவனம் - வீசா பரிந்துரைகள்**

வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் நிறுவனத்தினால் வேண்டப்பட்ட வீசா கடிதங்களுக்கான வீசாவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இவ் இராஜாங்க அமைச்சானது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குகின்றது.

	நுழைவு வீசா	வதிவிட நீட்டிப்பு வீசா
BIADP கட்டம் II நிலை 02 -தொகுதி ஏ	427	322
BIADP கட்டம் II நிலை 02 –தொகுதி பி	08	19
ஏனையவை	04	20
மொத்தம்	**439**	**361**

2.4 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் - 2021

அமைச்சரவை விஞ்ஞாபனம்	எண்ணிக்கை
அமைச்சரவை விஞ்ஞாபனம்	25
அமைச்சரவைக்கான குறிப்பு	3

2.5 தற்போதைய கொள்முதல் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் நிலைமை

இராஜாங்க அமைச்சின் கொள்முதல் பிரிவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, இலங்கை வரையறுக்கப்பட்ட தனியார் விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் ஆகிய நிறுவனங்களின் அனைத்து கொள்முதல் செயற்பாடுகளுக்கான அமைச்சு மட்ட இலக்குகளை முகாமைத்துவம்/ஒருங்கிணைப்புச் செய்து வருகின்றது. இது தவிர, அரசாங்க கொள்முதல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையினை பேணுவதுடன், இலங்கை அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டலுக்கு இணங்க கொள்முதல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான வழிகாட்டல்களையும் இராஜாங்க அமைச்சு வழங்கி வருகின்றது.

2.5.1. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் கொள்முதல் நடவடிக்கைகள்

ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ்		கொள்முதல் நடவடிக்கைகள்
வழங்கப்பட்டவை	SCAPC/CANC Level	04
	MPC Level	10
செயற்பாட்டிலுள்ளவை	SCAPC/CANC Level	09
	MPC Level	08
மொத்தம்	SCAPC/CANC Level	13
	MPC Level	18

2.5.2. வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் கொள்முதல் நடவடிக்கைகள்

கொள்முதல் நடவடிக்கைகள்	எண்ணிக்கை
வழங்கப்பட்டவை	01
செயற்பாட்டிலுள்ளவை	08
தாமதம்	04
மொத்தம்	**13**

2.6. வெளிநாட்டு நிதியளிப்பு செயற்றிட்டம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் முனையம் அபிவிருத்தி – கட்டம் II நிலை 2 தொகுதி ஏ (Package A)

மொத்த செயற்றிட்ட கிரயம்	-	ரூ. 105.5 பில்லியன்
ஆரம்பம்	-	15 டிசம்பர் 2020
உடன்படிக்கை நிறைவுறல்	-	14 டிசம்பர் 2023
செயற்றிட்ட காலம்	-	மூன்று வருடங்கள்
நிதியளிப்பாளர்	-	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA)
ஆலோசகர் ஆலோசகர்கள்,	-	ஜப்பான் விமான நிலைய Inc. and Nippon Koei Co. Ltd.
ஒப்பந்தகாரர்	-	TAISEI Corporation, Japan

அதிமேதகு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ அவர்களின் தொலைநோக்கு பார்வையான செழிப்பு மற்றும் சிறப்பு நோக்கிய நகர்வுடன் வரையறுக்கப்பட்ட தனியார் இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் ஆனது இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய தயாராகின்றது. நீண்ட கால தாமதங்களை கண்டறிந்து சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலைய முனையம் - 2 இன் கட்டுமான செயற்றிட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்னுரிமையளித்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையம் 2 இன் அடிக்கல் நாட்டும் வைபவம் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ஸ மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அதிமேதகு அகிரா சுகியமா ஆகியோரால் 18 நவம்பர் 2020 அன்று சம்பிரதாயபூர்வமான தொடங்கி வைக்கப்பட்டது


இந்த திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் விமான நிலைய செயற்பாடுகள் பயணிகளுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ளப்படும். புதிய முனையம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்ட பயணிகளுக்கு இனிமையான பயண அனுபவத்தை உருவாக்க உதவும். சுற்றுச்சூழல் விமான நிலையம் மற்றும் ஸ்மார்ட் விமான நிலையம் போன்ற கருக்களை

பிரதிபலிக்கும் வகையில் முனையம் அபிவிருத்தி செய்யப்படும். பல அடுக்கு வாகன தரிப்பிடம், புதிய விமான நிலைய ஓய்வறைகள், கேட் லோன்ஞ், இணைக்கப்பட்ட பல வித போக்குவரத்து போன்ற கூடிய வசதிகள் பயணிகளுக்கு சிறந்த வசதிகளையும் அனுபவத்தையும் வழங்கும்.

EXISTING FACILITIES & PROPOSED FACILITIES OF THE PROJECT (BIADP PII S2)

TYPE	Existing Terminal (T1)	New Terminal (T2) (Package A & B)	TOTAL (After Completion of BIADP PII S2)
Floor Area (m^2)	90,000 m^2	185,900 m^2	275,900 m^2
Check-in Counters	53 nos.	96 nos.	149 nos.
Departure Passport Control Counters	21 nos.	32 nos.	53 nos.
Airside Security Control Positions	8 Positions at Pier No.1 2 Positions at Bus Gate	20 Positions at Pier No.2 and No.3	30 Positions
Contact Gate	8 nos.	16 nos.	24 nos.
Bus Gate	6 nos.	10 nos.	16 nos.
Airline Lounge	4 nos.	6 nos.	10 nos.
Arrival Passport Control Counters	27 nos.	56 nos.	83 nos.
Baggage Claim Carousel	6 nos.	7 nos.	13 nos.
Baggage Make - up Carousel	3 nos.	7 nos.	10 nos.
Aircraft	26 nos.	23 nos. – 28 nos.	49 nos. – 54 nos.
Passenger	6 Million	9 Million	15 Million

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்காக கட்டம் II நிலை II தொகுதி ஏ (Package A) இற்காக முன்மொழியப்பட்ட செயற்றிட்டம்



முன்மொழியப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வான்வழிக் காட்சி புகைப்படம்



விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்ட செயற்பாடுகள்





விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்ட செயற்பாடுகள்





2.6.1. செயற்றிட்டத்தின் செயற்பாட்டு முன்னேற்றத்தின் சாராம்சம்

செயற்றிட்டத்தின் பெயர்	மீள் மதிப்பீட்டு கிரயம் (ரூ.மி)	ஒதுக்கம் 2021 (ரூ.மி)	31.12.2021இல் உள்ளவாறான மொத்த நிதி முன்னேற்றம் (தற்போதய யென் நாணயமாற்று விகிதம் கவனத்தில் கொள்ளப்பட்டது)	31.12.2021 இல் உள்ளவாறான பௌதிக முன்னேற்றம் (மூ)	31.12.2021இல் உள்ளவாறான பௌதிக முன்னேற்றம் சொற்களில்
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II நிலை II தொகுதி ஏ – பயணிகள் முனையம் கட்டிடம் மற்றும் தொடர்புடைய வேலைகள்	105,570	4,223	2,579	3%	கட்டுமான வேலைகள் - 26.96%, Piling - 68.18%, உப கட்டுமானம் - 9.02%,
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II நிலை II தொகுதி பி - Remote Apron &Taxiways	6,118	878	394	100%	நிறைவு செய்யப்பட்டுள்ளது

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்றிட்டம் கட்டம் II நிலை II தொகுதி சீ: Detailed Design and Post Design Consultancy Services	3,982	800	502	57%	அபிவிருத்திக்கான வடிவமைப்பு வேலைகள் 57% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2.7. ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி

2.7.1. அறிமுகம்

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் பொதுவாக பல நாடுகளால் திறந்த பொருளாதார கொள்கைகளுடன் அவர்களது ஏற்றுமதி துறைகளை உயர்த்துவதற்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கும் மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மற்றும் விரிவாக்கம் தொடர்பான அதன் பரந்த கொள்கையின் ஒரு பகுதியாக, 1978ல் இலங்கை அரசாங்கம் தனது முதல் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தை பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் கட்டுநாயக்கவில் நிறுவியது. கூடுதலாக, மேலும், இரண்டு வலயங்கள் 1986ல் பியகமவிலும் மற்றொன்று 1991ல் கொக்கலவிலும் செயற்பாட்டிற்கு வந்தன. வெளிநாட்டு முதலீடுகள் இவ் வலயங்களில் முக்கிய பங்கு வகிக்கும் என்னு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், உற்பத்திக்கான உள்ளீடுகளின் தீர்வையற்ற இறக்குமதிக்கான நடைமுறைக்கு மேலதிகமாக முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக கணிசமான வரிச் சலுகைகள் மற்றும் நிர்வாக நிலைக்கான உள்நுழைவு வீசாக்களும் வழங்கப்பட்டன

எவ்வாறாயினும், 14 ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் மற்றும் பூங்காக்கள் இலங்கை முதலீட்டு சபையின் கீழ் தற்போது இயங்கி வருகின்றன மேலும், 2017ஆம் ஆண்டில் புதிய ஏற்றுமரி ஊக்குவிப்பு வலயங்களை இலங்கை முதலீட்டு சபையால் ஏற்படுத்தப்பட்டு அதன் உயர்ந்த பட்ச இயலுமையுடன் அவை இயக்கப்பட்டு வருகின்றன.


2.7.2. செயற்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்கள்


I. பிங்கிரிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம்

2017ஆம் ஆண்டு நாட்டின் பல பகுதிகளில் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை நிறுவுவதற்கான மூலோபாயத்திற்கிணங்க, தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு சொந்தமான குருணாகல் மாவட்டத்தில் உடுபத்த பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட முறையே 164 மற்றும் 283 ஏக்கர் பரப்பளவுடைய ‘‘ஜெர்மன்வத்த’’ மற்றும் ‘‘கொரகாசகரவத்த’’ எனும் நிலங்களுக்குள் இலங்கை முதலீட்டு சபை ஒரு புதிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தை உருவாக்கியது.

இச் செயற்றிட்டம் கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்படும் மற்றும் ஜெர்மன்வத்த முதலாம் கட்டமாகவும் கொரகாசகரவத்த இரண்டாம் கட்டமாகவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

பிங்கிரிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் தளநிலை வரைபடம்





நில பரப்பு – 283 ஏக்கர்

நில பரப்பு – 157 ஏக்கர்

தற்போது மூன்று முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளனர். இம் முதலீட்டாளர்களில் ஒரு நிறுவனத்தால் கட்டுமான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன மற்றும் ஏனைய இரண்டு நிறுவனங்களாலும் முதலீட்டு சபையுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்ட கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிங்கிரிய ஏற்றுமதி வலயம்

பிங்கிரியவில் நிர்மாணப் பணிகள்





வரையறுக்கப்பட்ட சினர்ஜி பார்மசூட்டிகல் கோர்ப்பரேஷன்



எம்பயர் பீட் மில் (Empire Feed Mill)



வரையறுக்கப்பட்ட எம்/எஸ் ஷங்காய் டொங்ஸியா இன்டஸ்ரீஸ் மற்றும் கொமர்ஸ் கம்பனி (M/s Shanghai Dongxia Industrial &

Commerce Co.Ltd.)



பாதை அபிவிருத்தி வேலை

கால்வாய் அபிவிருத்தி வேலை



செயற்பாட்டு முன்னேற்றம் - பிங்கிரிய

செயற்றிட்ட செலவுகளும் முன்னேற்றமும் - 31.12.2021

	பணி பற்றிய விபரம்	மதிப்பீட்டு செலவு ரூ.மில்.	31.12.2021 ஆம் திகதி வரை திறைசேரி நிதியிடல் மூலமான செலவு ரூ.மில்.	31.12.2021 ஆம் திகதி வரை முதலீட்டு சபை நிதியிடல் மூலமான செலவு ரூ.மில்..	ஏதிர்கால தேவைப்பாடு ரூ.மில்.. திறைசேரி மூலமனது	பௌதிக முன்னேற்றம் %
1	வலயத்திற்கான காணி சுவீகரிப்பு	**278.30**	**278.30**			**100%**
2	வீதி விஸ்தரிப்பிற்கான காணிகள் சுவீகரிப்பு	**212.00**		**52.00**	**160**	**15%**
3	**வீதிகள்**	**2,225.27**	**575.00**		**1545.40**	
	துந்தோட்ட முதல் ஜே.ஆர். சந்தி	**227.10**				**7.6%**
	ஜே.ஆர். சந்தி முதல் வத்துவத்த - ஹெட்டியாகொட்டுவ சந்தி வரை	**1,998.17**				**69%**
4	ஹெட்டியாகொட்டுவ முதல் சிலாபம் நீர் வழங்கல்	**456.28**	**340.10**		**00.00**	**90%**
5	மின் விநியோகம் (இ.மி.ச)	**47.67**	**12.24**	**35.43**	**00.00**	
	ஆரம்ப மின் விநியோகம்	**12.24**	**12.24**			**100%**
6	8MVA நிரந்தர விநியோகம்	**58.24**				
	வலயத்திற்கு உள்ளே **HT Et LT**	**35.43**		**35.43**		**65%**
7	வேலியிடல் (கட்டம் **I)**					
	சுற்றுவட்ட வேலி (கட்டம் I)	**32.00**		**16.50**		**70%**
மொத்தம்		**3,309.76**	**1,205.64**	**103.93**	**1,705.40**	

II. வகாவத்தை ஏற்றுமதிச் செயலாக்க வலயம்

வகாவத்தை ஏற்றுமதி செயலாக்க வலயம் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தற்போது தெற்காசியாவில் நவீன ஐரோப்பிய தயாரிப்பு தொழிநுட்பத்தைக் கொண்டு விளங்குகின்ற பாரிய தொழிற்சாலையான வரையறுக்கப்பட்ட தனியார் பெரன்டினோ டயர் கோபரேஷன் 155 ஏக்கர் நிலப்பரப்பில் வகாவத்தை கைத்தொழில் வலயத்தில் இயங்கி வருகின்றது.

மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வகாவத்தை ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் கட்டமைக்கப்பட்டு வருகின்ற பாரிய அபிவிருத்தி திட்டமாக உப மின் அழுத்த மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது, மேலும் வலயத்தின் போக்குவரத்தினை மேம்படுத்த வீதி அதிகார சபை அடைவு பாதைகளை விருத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

நடைபெற்று வரும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள்





வரையறுக்கப்பட்ட தனியார் பெரண்டினோ டயர் கோப்பரேஷன் (Ferentino Tyre Corporation (Pvt) Ltd) நிர்மாணப் பணிகள் - ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் டயர்கள்





நடைபெற்று வரும் வகாவத்தை வீதி அபிவிருத்தி வேலைகள்





வகாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் உயர் மின்அழுத்த மின் நிலையம் (*Construction of Grid Substation in wagawatte)*

பணி பற்றிய விபரம	மதிப்பீட்டு செலவு ரூ.மில்.	31.12.2021 ஆம் திகதி வரை திறைசேரி நிதியிடல் மூலமான செலவு ரூ.மில்.	31.12.2021 ஆம் திகதி வரை முதலீட்டு சபை நிதியிடல் மூலமான செலவு ரூ.மில்.	ஏதிர்கால தேவைப்பாடு ரூ.மில். திறைசேரி மூலமனது	பௌதிக முன்னேற்றம் %
1. மின்சார விநியோகம் (உயர் மின் அழுத்த மின் நிலையம்)	1,898	1697.4		105.32	79.5%
2. பாதைகள்	1,282	494.4		787.6	85%
A.வகாவத்தைசந்தி மற்றும் அடைவு பாதை (2.5Km)	914				70%
B.அருணகம பாதையிலிருந்து வலய எல்லை வரை (520m)	189				98%
C. அருணகம பாதை (400m)	179				98%
3. **முதலீட்டு வலயத்தினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு**	230		218		100%
மொத்தம்	**3,410**	**2,192.4**	**218**	**892.92**	

2.7.3. இலங்கை முதலீட்டு சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான வீசா பரிந்துரைகள்

தொ.இல.	தலைமை காரியாலயம்	மொத்தம்
1	நுழைவு வீசா	**2854**
2	நீட்டிப்பு வதிவிட வீசா	**5214**
3	தற்காலிய வீசா	**649**
4	பல்துறை வீசா	**3**

மொத்தம்		**8720**
ஏற்றுமதி வலயங்களுக்கான வீசா		
1	நுழைவு வீசா	**187**
2	நீட்டிப்பு வதிவிட வீசா	**623**
3	தற்காலிய வீசா	**52**
4	பல்துறை வீசா	**4**
மொத்தம்		**866**

2.7.4. எதிர்கால செயற்றிட்டங்கள் - ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி

2022 வரவு செலவு திட்ட பிரேரணைகள் - விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

தொ. இல.	ஏற்றுமதி செயலாக்க வலயம்	அமுல்படுத்தும் முகவர்	செயற்றிட்டத்தின் நிலை
1.	மருந்து உற்பத்தி வலயம், அரபொக்க	முதலீட்டு சபை	இடம் பெற்று வருகின்றது
2.	ஆடை ஏற்றுமதி வலயம், ஏறாவூர், மட்டகளப்பு	முதலீட்டு சபை	இடம் பெற்று வருகின்றது
3.	விவசாய செயலாக்க வலயம், அரபொக்க, ஹம்பாந்தோட்டை	முதலீட்டு சபை	புதியது
4.	உருக்கு மற்றும் கனரக உற்பத்தி வலயம் - கட்டம் II மிரிஜ்ஜாவில, ஹம்பாந்தோட்டை	முதலீட்டு சபை	புதியது
5.	தகவல் தொழில் நுட்ப வலயம், சூரியவேவ	முதலீட்டு சபை	புதியது
6.	மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி வலயம், ஹினிகம	முதலீட்டு சபை	புதியது
7.	பிங்கிரிய கட்டம் ஐஐ	முதலீட்டு சபை	புதியது
8.	தகவல் தொழில் நுட்ப பூங்கா, கண்டி (விரிவாக்கம்)	முதலீட்டு சபை	புதியது
9.	ஏற்றுமதி செயலாற்றுகை வலயம்,	முதலீட்டு சபை	புதியது

	வகாவத்தை		
10.	இறால் ஏற்றுமதி வலயம், புத்தளம்	கடற்றொழில் அமைச்சு	புதியது
11.	மீன் வளர்ப்பு வலயம், ஹம்பாந்தோட்டை, கல்முல்லை	கடற்றொழில் அமைச்சு	புதியது
12.	மீன் வளர்ப்பு வலயம், இலுப்பக்கடவை	கடற்றொழில் அமைச்சு	புதியது
13.	மீன் வளர்ப்பு வலயம், வாகரை, கொக்கட்டிச்சோலை, மட்டகளப்பு	கடற்றொழில் அமைச்சு	புதியது
14.	உயர் மின் அழுத்த மின் நிலைய கட்டுமானம், ஹம்பந்தோட்டை	முதலீட்டு சபை	புதியது
15.	விவசாய செயற்பாட்டு வலயம், எல்பிட்டிய	சிறுதானியங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	புதியது

செயலாளர்

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

அத்தியாயம் 3 – வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதி செயலாற்றுகை

ஏசீஏ- எப்

3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	**வருமானப் பெறுகைகள்**		3,350,052,053	7,548,000,772	
-	வருமான வரி	1		-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2		-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3		-	
4,000,000,000.00	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	3,350,052,053	7,548,000,772	
4,000,000,000.00	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		**3,350,052,053**	**7,548,000,772**	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		914,542,000	168,950,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		144,340	758,943	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		1,866,456	1,856,025	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**916,552,796**	**171,564,968**	
	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**4,266,604,849**	**7,719,565,740**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	-	
-	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**4,266,604,849**	**7,719,565,740**	
-	**மீண்டுவரும் செலவினம்**				
58,300,000.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	38,988,168	23,707,770	ஏசீஏ-2(ii)
112,664,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	63,815,754	23,947,591	
1,500,000.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	208,852	-	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	881,652	
172,464,000.00	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**103,012,774**	**48,537,013**	
	மூலதனம் செலவினம்				
7,500,000.00	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	3,616,821	809,588	ஏசீஏ-2(ii)
5,000,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	3,647,710	628,200	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,000,000.00	திறன் விருத்தி	14	303,900	184,500	
1,900,000,000.00	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	858,454,164	225,000,000	
1,913,500,000.00	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**866,022,595**	**226,622,288**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		625,465	240,293	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		3,597,639	4,630,831	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**4,223,104**	**4,871,124**	
2,085,964,000.00	**மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)**		973,258,471	**280,030,425**	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**3,293,346,378**	**7,439,535,315**	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		**3,293,346,378**	**7,439,535,315**	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி			-	ஏசீஏ-3
			-	-	

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021	2020
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	16,268,793	1,024,500
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	4,505,988	2,774,806
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**20,774,781**	**3,799,306**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		4,468,462	2,256,156
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		16,268,793	1,024,500
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	37,526	518,650
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3		
மொத்தப் பொறுப்புக்கள்		**20,774,781**	**3,799,306**

பக்க இலக்கம் ..... முதல் ..... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் ..... முதல் ..... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி :	திகதி :	திகதி :

එස්. ජනක ශ්‍රී චන්ද්‍රගුප්ත
ලේකම්
ගුවන් සේවා හා අපනයන කලාප සංවර්ධන
රාජ්‍ය අමාත්‍යාංශය
30වන මහල, බටහිර කුළුණ
ලෝක වෙළඳ මධ්‍යස්ථානය, කොළඹ 01

N P Dharmaratne
Chief Accountant
State Ministry of Aviation &
Export Zones Development
Level 30, West Tower
World Trade Center, Colombo 01

3.3. காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

3.3. 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை 2021 ரூபா	திருத்தப்பட்ட 2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		-
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	1,402,126	221,745
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	914,542,000	168,950,000
முற்பணங்களை அறவிடல்	2,951,789	5,312,051
வைப்புக்களின் பெறுகை	144,340	758,943
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**919,040,254**	**175,242,739**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	102,209,757	12,188,029
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	208,852	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	(14,000)	120,000
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
முற்பணக் கொடுப்பனவு	3,597,639	6,359,129
வைப்புக் கொடுப்பனவு	625,465	240,293
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**106,627,712**	**18,907,451**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**812,412,543**	**156,335,288**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	812,412,543	156,335,288
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**812,412,543**	**156,335,288**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(812,412,543)**	**(156,335,288)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளுர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
